20.2.2019--AROP 29/2018-P.W.1 சாட்சி அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்ப்டடார்.

கு.வி.2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

தேசீய நெடுஞ்சாலையில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான திட்டபணிகள் 2011-12 ல் ஏற்பட்டது என்றால் சரி. 3 எ 1, அறிவிப்பு 1.1.2014 ல் கொடுக்கப்பட்டது என்றால் சரி. அதன் சரத்துக்கள் 13.1.2014 ல் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் வெளியானது என்றால் சரி. அதன்பிறகு சிறப்பு டி.ஆர்.ஒ. இராமநாதபுரம் விசாரணை நடத்தினார் என்றால் சரி. அதில் நாங்கள் ஆட்சேபணை தெரிவித்தோம். 3 டி1 அறிவிப்பு 18.9.2014 லிலும் அதனை தொடர்ந்து 10.11.2014 ல் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் வெளியானது என்றால் சரி. அதற்கும் நாங்கள் ஆட்சேபணை தெரிவித்திருந்தோம். அதில் எந்த மரங்களும் இல்லை. நிலத்திற்கு நில வரி கட்டியிருந்தேன். ரெவன்யூ ரிக்கார்டு பதிவேட்டில் நிலம் நஞ்சை நிலம் என்றுதான் உள்ளது என்றால் சரி. எங்கள்நிலத்தில் என்சினியரிங் கல்லூரி, பேக்டரி அருகாமையில் உள்ளது என பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. செண்ட் ரூ-60,000/- செல்கிறது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சிறப்பு டி.ஆர்.ஒ. மற்றும் கலெக்டரிடம் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சார்பு பதிவாளர் அலுவகத்தில் இருந்து 3 ஆண்டுகளுக்கான டேட்டா எடுத்து அதில் உயர்ந்தபட்ச நஞ்சை நில மதிப்பில் 50 சதவிகித சராசரி நிர்ணயம் செய்து அதிகப்படியான தொகையை வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. 923 ரூபாய் சதுர மீட்டருக்கு கொடுததார்கள் என்றால் சரி. ஒரு சதுர மீட்டருக்கு அந்த வருடத்தில் 49.38 பைசா தான் இருந்தது வழிகாட்டு மதிப்பீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கைடு லைன் மதிப்பை விட 19 மடங்கு அதிகமாக கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. 16.7.2015 தேதியில சிறப்பு டி.ஆர்.ஒ. எங்கள் நிலத்தை அளந்து தக்க இழப்பீடு வழங்கினார் என்றால் சரியல்ல. டி.ஆர்.ஒ.விடமும் ஆட்சியாளரிடமும் வீட்டடி மனைஇடத்திற்கான ஆவணம் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எங்கள் நிலம் நஞ்சை நிலம் தான் என்றால் சரி. மேற்படி நிலம L.P.A.-ன்படி

Mixed Residency land என வருகிறது. சிறப்பு டி.ஆர்ஒ. மற்றும் ஆட்சியர் எங்களுக்கு அதிகப்படியான இழப்பீடு தான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.2 கிரைய ஆவணம் அங்கீகரிக்கப்பட்ட நிலத்தின் கிரைய ஆவணமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

கு.வி. 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை மேற்கொள்கிறார்.

ம.வி. இல்லை.